1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதுபற்றி பேசவேண்டாம் என்று நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி இருக்கின்றார்கள். அவர்களுக்கு, மாணவர்களைச் சேர்ப்பதில் நாம் எந்தவிதமான கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. டெல்லி, உயர்நீதிமன்றமானது, இதுபோன்ற சிறுபான்மைக் கல்வி நிலையங்கள் 50 சதவீதத்திற்கு மேலே மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்ற தீர்ப்பை வழங்கி இருக்கிறது. மீதி 50 சதவீதத்தை தகுதி அடிப்படையிலே சேர்க்கவேண்டுமென்றுதான் டெல்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பு தந்திருக்கிறது. அந்த மாதிரியான கட்டுப்பாட்டை இது வரையிலும் தமிழ்நாடு அரசு சிறுபான்மைக் கல்வி நிலையங்களில் கொண்டுவரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அப்படி ஏதாவது கொண்டுவரவேண்டுமென்று நினைப்பது போலத் தெரிகிறது. அப்படித் தேவையானால், அதைக் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1992), மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1992 ஏப்ரல் 28

முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1992) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்.'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

@ 24—4—1992ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 3–15.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகுகல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி.)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1992). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1992) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

@ 24–4–1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.